தினமணி

**மாமண்டூர் ஏரியில் நீர் வரத்து குறைந்தது: நெல்லுக்குப் பதில் பூசணிக்கு மாறிய விவசாயிகள்**

First Published : 27 Sep 2010 09:44:56 AM IST

காஞ்சிபுரம், செப். 26: காஞ்சிபுரம் அருகே மாமண்டூர் ஏரியைச் சுற்றியுள்ள விவசாயிகள் பலர் ஏரியில் தண்ணீர் வராததால் நெற்பயிருக்கு பதில் கல்யாண பூசணியை பயிர் செய்யத் தொடங்கியுள்ளனர்.

÷மாமண்டூர் ஏரி சுமார் 1500 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. மலைப் பகுதிகளே கரை போல் அமைந்த நிலையில் இந்த ஏரி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஏரியில் போதிய அளவு தண்ணீர் இருக்கும்போது முதல் மடை, இடை மடை, கடை மடை என்ற மூன்று பகுதிகளிலும் இருக்கும் விவசாயிகள் முப்போகமும் நெல் சாகுபடி செய்து வந்தனர்.

÷ஆனால் கடந்த 7 ஆண்டுகளாக இந்த ஏரிக்கு போதிய அளவு தண்ணீர் வரவில்லை.

இதனால் விவசாயிகள் பலர் நெல் பயிரிட முடியாமல் பாதிக்கப்பட்டனர்.

வறட்சியை சமாளிக்க கூடிய வகையில் பலர் கல்யாண பூசணியை பயிர் செய்யத் தொடங்கியுள்ளனர்.

÷இது குறித்து அப் பகுதி விவசாயிகளிடம் கேட்டபோது, ஏரிப் பாசனத்தை நம்பி நெல் பயிர் செய்ய முடியவில்லை.

வறுமையை தாங்க முடியாததால், வறட்சியை தாங்கி வளரக் கூடிய கல்யாண பூசணியை பயிர் செய்து வருகிறோம். அடுத்த முறை கேழ்வரகுக்கு மாறலாமா என யோசித்து வருகிறோம் என்றனர்.

**பப்பாளியில் இருந்து பொருள்கள் தயாரிக்க பயிற்சி**

First Published : 27 Sep 2010 11:53:14 AM IST

பெரம்பலூர், செப். 26: பப்பாளி பழத்தில் இருந்து மதிப்பு ஊட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பது குறித்த பயிற்சி பெற முன்பதிவு செய்ய அழைப்பு விடுத்துள்ளார் ரோவர் வேளாண்மை கல்லூரி முதல்வர் ஜி. ஜேம்ஸ் பிச்சை.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் ரோவர் வேளாண்மை கல்லூரியில், பப்பாளி பழத்திலிருந்து, மதிப்பு ஊட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பது தொடர்பான ஒருநாள் பயிற்சி முகாம் அக். 5 ஆம் தேதி நடைபெறுகிறது. இந்தப் பயிற்சியில், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், குடும்பப் பெண்கள், விவசாயிகள், வியபாரிகள் மற்றும் மாணவ, மாணவிகள் உள்ளிட்டோருக்கு பயிற்சி அளிக்கப்படும்.

எனவே, இதில் பங்குபெற விருப்பம் உள்ளவர்கள், பெயர் மற்றும் முகவரியை, ரோவர் வேளாண் கல்லூரியில் பதிவு செய்து கொள்ளலாம். இதுதொடர்பான விவரங்கள் பெற, உணவியல் துறை பேராசிரியர் முனைவர் கே.பி. சிவக்குமாரை 9865893665 என்ற எண்ணில் தொடர்புகொண்டு பயன்பெறலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**விளாத்திகுளத்தில் செம்மை நெல் சாகுபடி பயிற்சி**

First Published : 27 Sep 2010 01:18:09 PM IST

கோவில்பட்டி, செப். 26: தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் வைப்பாறு துணைவடி நிலப் பகுதியான விளாத்திகுளத்தில் செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி வியாழக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் சார்பில் உலக வங்கி நிதியுதவியில் நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் விளாத்திகுளத்தில் நடைபெற்ற இந்த பயிற்சியில் திட்டத்தின் பொறுப்பு அறிவியல் வல்லுநர் பேராசிரியர் பூமிராஜ் திட்ட செயலாக்க முறைகள் மற்றும் விவசாயிகளுக்கு கிடைக்கும் நன்மைகள் பற்றி விளக்கினார்.

வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் இணைப் பேராசிரியர் ரங்கராஜ், உதவிப் பேராசிரியர் கமல்குமார், உதவி பேராசிரியர் ஸ்ரீதரன் உள்பட பலர் பேசினர்.

ஏற்பாடுகளை தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டத்தின் முதுநிலை ஆராய்ச்சியாளர் செல்வக்குமார் செய்திருந்தார்.

தினமலர்

**சம்பா பயிர்களை பூச்சிகள் தாக்கும் – பருவநிலை மாற்றத்தால் கவலை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2010,00:12 IST

பேரம்பாக்கம் : பருவ நிலை மாற்றத்தால் சம்பா நெற்பயிர்களை பூச்சிகள் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலையுடன் உள்ளனர்.
ஐப்பசியில் அடைமழை, மார்கழியில் கடும் பனி என பெரியவர்கள் கூறுவர். ஆனால், தற்போது இதற்கு மாறாக புரட்டாசியிலேயே பனி பெய்து வருகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் ஏற்கனவே நடந்த மணல் திருட்டு, ஏரிகள் தூர் வாராதது, ஏரிகள் ஆக்கிரமிப்பு ஆகியவற்றால் போதிய மழைநீரை சேமிக்க முடியவில்லை.இதனால், ஆறு மற்றும் ஏரிப் படுகைகளில் நிலத்தடி நீர் முற்றிலும் குறைந்து விட்டது. கடந்த சொர்ணவாரி பட்டத்திலேயே விவசாயிகள் பலர் தங்களது விளைநிலங்களில் இருந்த நெற்பயிர்களை காப்பாற்ற முடியாமல் அவதிப்பட்டனர்.இந்நிலையில், விவசாயிகள் கொஞ்சம் இருந்த நிலத்தடி நீரை நம்பியும், ஐப்பசியில் அடை மழை பெய்யும் என சம்பா பயிரிட்டனர். மேலும், பருவமழை பெய்யுமா, பெய்யாதா என விவசாயிகள், வானத்தை பார்த்ததுதான் மிச்சம்.ஏற்கனவே, கிராமப்புறங்களில் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்துக்கு ஆட்கள் சென்று விடுவதால், விவசாயக் கூலி வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறை, அடிக்கடி ஏற்படும் மின்தடை, நிலத்தடி நீர்மட்டம் குறைவு, பருவ மழை ஏமாற்றம் என விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.இக்கவலைகள் ஒருபுறம் இருக்க, தற்போது புரட்டாசி மாதத்தில் பனிமூட்டம் அதிகம் இருப்பதால் நெற்பயிர்களை பூச்சிகள் தாக்கும் அபாயம் உள்ளது என, மற்றொரு கவலையும் விவசாயிகளைத் தொற்றிக் கொண்டுள்ளது.இவ்வாறு சொர்ணவாரி, சம்பா, குறுவை என ஒவ்வொரு சாகுபடியிலும் நிலத்தில் போட்ட பணத்தை எடுக்க முடியாத நிலையில் விவசாயிகள் பலர் கடனாளிகளாக உள்ளனர். பல விவசாயிகள் தங்களது விளைநிலத்தை பிளாட்டுகளாக மாற்றி விற்று வரும் நிலையும் ஏற்பட்டுள்ளது

**வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம் தனியாரிடம் ஒப்படைக்க எதிர்ப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 28,2010,02:52 IST

சிதம்பரம்: கிராம அளவிலான வேளாண் பயிர் காப்பீட் டுத் திட்டத்தை தனியாரிடம் ஒப்படைக்க தமிழக உழவர் முன்னணி எதிர்ப்பு தெரிவித் துள்ளது. தமிழக உழவர் முன் னணி கடலூர் மாவட்ட செயலாளர் ஆறுமுகம் விடுத்துள்ள அறிக்கை: கிராம அளவில் வேளாண் பயிர் காப்பீட் டுத் திட்டத்தை சில மாவட்டங்களில் நடைமுறைப்படுத்த தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு நிறுவனம் முன்வந் துள்ளது. ஏக்கர் வாரியாக பயிர் காப்பீடு செய்ய வேண் டும் என தமிழக உழவர் முன்னணி வலியுறுத்துகிறது. இத்திட்டம் தமிழகத்தின் அனைத்து மாவட் டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். இக்காப்பீட்டுத் துறையில் தனியாரை அனுமதிக்கக் கூடாது.\
இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**தானிய பாதுகாப்பு முறைகள்: விவசாயிகளுக்கு ஆலோசனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 28,2010,02:58 IST

சிதம்பரம்: விளை பொருட்களை பாதுகாப்பாக சேமித்து வைத்து பயன்படுத்த ஒருங்கிணைந்த தானிய பாதுகாப்பு முறைகளை கடை பிடிக்க வேண்டும் என வேளாண் அலுவலர்கள் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர். வேளாண் துணை இயக்குநர் தனவேல், அலுவலர் சித்ரா ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: அறுவடையின் போதே பூச்சி தாக்குதலில் இருந்து விளை பொருட்களை பாதுகாத்தல் அவசியம். விளை பொருட்களின் ஈரத்தன்மையை சரியான அளவில் பராமரிக்க வேண்டும். விளை பொருட்கள் காய வைக்கும் களங்கள், கோணிப் பை, குதிர்கள், தூர்தால் மற்றும் கிடங்குகள் ஆகியவற்றில் பூச்சி கொள்ளி மருந்து தெளிக்க வேண்டும். ஒருங்கிணைந்த எலி ஒழிப்பு முறைகளை கையாள்வது, பூஞ்சான் தாக்குதலில் இருந்து தடுக்க மாலத்தியான் 0.1 சதவீதம் தெளிப்பது போன்ற ஒருங்கிணைந்த தானிய பாதுகாப்பு முறைகளை கையாண்டு பயன்பெறலாம் என செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**மரவள்ளியில் மாவுப்பூச்சி தாக்குதலை தடுக்க பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 28,2010,02:10 IST

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை தோட்டக்கலைத்துறை சார்பில், மாவுப்பூச்சியை கட்டுப்படுத்துவது குறித்த பயிற்சி மற்றும் கருத்தரங்கு ஒண்டிக்கடையில் நடந்தது.நாமக்கல் தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் தனகோபாலன் தலைமை வகித்தார். தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கணபதி வரவேற்றார். எம்.எல்.ஏ.,க்கள் ராமசுவாமி, பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மரவள்ளி பயிரில் மாவுப்பூச்சி தாக்குதலால் ஏற்படும் சேதம், கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம், அதை கட்டுப்படுத்த விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய வழிமுறை, சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பது குறித்து விளக்கப்பட்டது.

மேலும், மரவள்ளி உட்பட பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களை பராமரிப்பது, காப்பீடு செய்தல், காப்பீட்டு திட்டத்தின் அவசியம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. மரவள்ளியில் மாவுப்பூச்சி தாக்கத்தை கட்டுப்படுத்தும் பயிர்பாதுகாப்பு முறை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.மாவுப்பூச்சி தாக்குதலால் நாமகிரிப்பேட்டை மற்றும் சுற்று வட்டாரப்பகுதியில் 3,308 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள மரவள்ளிபயிர் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பெயர், முகவரி உள்ளிட்ட விபரங்களை வேளாண் அலுவலர் மற்றும் தோட்டக்கலை துறை அலுவலர்கள் பதிவு செய்தனர்.

கருத்தரங்கில் சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானி கீதா, நாமகிரிப்பேட்டை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார், அலுவலர் ஆசைத்தம்பி, உதவி வேளாண் அலுவலர்கள் சக்திவேல், கோபால், முத்துராமன், முருகதாஸ், மரவள்ளி கிழங்கு விவசாயி சங்க மாநில தலைவர் பொன்னுசாமி, அமைப்புச் செயலாளர் சுப்ரமணி, பொருளாளர் தங்கம் உள்பட 1,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை மூலம், மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய பயிர்பாதுகாப்பு முறை குறித்த துண்டு பிரசுரம் விநியோகம் செய்யப்பட்டது.

**திராட்சை விலை சரிவு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2010,22:04 IST

பேரூர்: தொண்டாமுத்தூர் சுற்றுப்பகுதிகளில் திராட்சை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுதோறும், ஜூன், ஜூலை மாத காலங்களில் பருவமழையின் தாக்கத்தால், திராட்சை சாகுபடி உற்பத்தி பாதிக்கப் படும். ஆனால், நடப்பாண்டில், எதிர் பார்த்த பருவமழையின் தாக்கம் இல்லாமல் போனதால், திராட்சை சாகுபடி சூடுபிடித்தது;திராட்சை பழங்களுக்கு நல்ல விலையும் கிடைத்தது. கடந்த இரு நாட்களில், திராட்சை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தற்போது, ஒரு கிலோ திராட்சை ரூ. 26க்கும், ஆறு கிலோ கொண்ட திராட்சைபழ பெட்டி ரூ.130 முதல் ரூ. 150 வரைக் கும் விற்கப்படுகிறது. கடந்த ஒரு வாரத்தில், திராட்சை கிலோ ஒன்றுக்கு 12 ரூபாய் குறைந் துள்ளது.

**இணைய தளத்தில் தகவல் பதியும் விவசாயிகளுக்கு முன்னுரிமை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2010,22:07 IST

திருப்பூர்: தங்களது விபரங்களை வேளாண் துறை மூலம் இணைய தளத்தில் பதிவு செய்யும் விவசாயிகளுக்கு, நலத்திட்டங்களில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது; பதிவு செய்ய, விவசாயிகளுக்கு வேளாண் துறை அழைப்பு விடுத்துள்ளது.மாநிலம் முழுவதும் உள்ள விவசாயிகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் விபரங்களை தனி இணைய தளத்தில் பதிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. திருப்பூர் மாவட்ட விவசாயிகளும், தங்களுக்குரிய வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட வேளாண் துறை இணை இயக்குனர் முத்துசாமி கூறியதாவது:விவசாயிகளின் பெயர்,

முகவரி, தொலைபேசி எண், நில விபரம், விளைவிக்கும் பயிர் என 30க்கும் மேற்பட்ட விபரம் http:// www.tnagrisnet.tn.gov.in என்ற இணைய தள முகவரியில் சேகரிக்கப்படுகிறது. ஒவ்வொரு விவசாயிக்கும் தனி எண் வழங்கப் படுகிறது. மாவட்டம் முழுவதும் உள்ள 1.65 லட்சத்துக்கு மேற்பட்ட விவசாயிகளின் விபரங்களை சேகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.நேற்று முன்தினம் வரை 25 ஆயிரம் விவசாயிகள், தங்களது விபரங்களை பதிவு செய்துள்ளனர். பதிவு செய்யும் விவசாயிகளுக்கு, திட்டங்களில் முன்னு ரிமை அளிக்கப்படும். விவசாயிகள், அந்தந்த வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுக வேண்டும். பதிவுக்கான விண்ணப் பங்களை பெற்று, உரிய தகவலை பூர்த்தி செய்து அளிக்க வேண்டும். அனைத்து விவசாயிகளும் தங்கள் விபரங்களை அளிக்க முன்வர வேண்டும்.அனைத்து விவசாயிகளின் தகவல்களை பெறும் போது, மாவட்டத்துக்கு தேவையான ஒதுக்கீட்டை பெற முடியும். துறை மூலம் விவசாயிக்கு வழங் கப்படும் பயன் குறித்தும் பதிவு செய்யப்படுகிறது. வேளாண் துறை அலுவலகங்களில் மட்டும் இணைய தளத்தை பார்க்க வசதி செய்யப் பட்டுள்ளது.இவ்வாறு, முத்துசாமி கூறினார்.

**ஆடு கொள்முதல் விலை சரிவு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2010,22:14 IST

பல்லடம்: பல்லடம் வாரச்சந்தையில் ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமை ஆட்டுச் சந்தை கூடுவது வழக்கம். நேற்று நடந்த வாரச்சந்தையில் செலக்கரிச்சல், வாரப் பட்டி, அய்யம்பாளையம், வடுகபாளையம், சித்தம் பலம், அப்பநாயக்கன் பட்டி உட்பட பல்வேறு ஊர்களில் இருந்து விவசாயிகள் 150க்கும் மேற்பட்ட வெள்ளாடுகளை சந்தையில் விற்க கொண்டு வந்திருந்தனர்.புரட்டாசி மாதம் என்பதால் ஆட்டிறைச்சியை பொதுமக்கள் விரும்பி நுகர மாட்டார்கள். இதனால், சந்தையில் ஆடுகளை வாங்க, திருப்பூர், கோவை மற்றும் கேரளாவில் இருந்து வியாபாரிகள் நேற்று அதிக அளவு வரவில்லை.இதன் காரணமாக, கடந்த வாரம் கிலோ ரூ.240க்கு விலை போன ஆடுகள், நேற்று கிலோ ரூ.210 என்ற விலைக்கு மட்டுமே விலை போனது. ஆடு விலை கிலோவுக்கு ரூ.30 விலை சரிவு விவசாயிகளை வேதனையில் ஆழ்த் தியிருந்தது. இன்னும் இரண்டு வாரத் துக்கு கொள் முதல் விலை சரிவாகவே இருக்கும்.

**தொடர் மழை; தக்காளி விளைச்சல் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2010,22:15 IST

பொங்கலூர்: பொங்கலூர் பகுதியில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, தக்காளி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது; விலை அதிகரித்துள்ளது.
பொங்கலூர் பகுதி விவசாயிகள், அதிகளவில் தக்காளி விளைச்சலில் ஈடுபட்டுள்ளனர். மொத்த காய்கறி விளைச்சல் பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதி தக்காளி பயிரிடப்படுகிறது. இந்தாண்டு முழுவதும் தக்காளிக்கு ஓரளவு நல்ல விலை கிடைத்து வந்தது.கோடை காலத்தில் நிலவிய கடும் வெப்பம் காரணமாக விளைச்சல் கடுமையாக பாதிக்கப் பட்டது. அப்போது ஏற்பட்ட விலை உயர்வு, சில மாதங்களாக குறைந்து காணப்பட்டது. தற்போது விட்டுவிட்டு பெய்த மழையால், இதுவரை பாதியளவு பழங்கள் அழுகி, வீணாகி விட்டன.பீகார், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங் களில் பெய்த கனமழையால், கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்களில் விளையும் தக்காளி, வட மாநிலங்களுக்கு சப்ளை செய்யப்படுகிறது. இதனால், வெளியூர் தக்காளி வரத்து மிகவும் குறைந்து விட்டது.இங்கு விளையும் தக்காளியை கொண்டே, உள்ளூர் தேவையை பூர்த்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மழை ஆரம்பித்த சில நாட் களிலேயே 100 சதவீத விலை உயர்வு ஏற்பட் டுள்ளது. இன்னும் பருவமழை தீவிரமடையும் பட்சத்தில், விலை உயர்வு கடுமையாக அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் ஐந்தரை கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி 40 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது ஒரு கூடை 80 ரூபாய்க்கு விற்பனையாகிறது. கடைகளில் கிலோ 18 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

**உரம் தயாரிக்க தண்ணீர் விநியோகம்: ரூ.18 லட்சத்தில் கரூர் நகராட்சி திட்டம் தயாரிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 28,2010,01:14 IST

கரூர்: கரூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில், உரம் தயாரிக்க தேவையான தண்ணீரை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம், விநியோகம் செய்வதுக்கு 16 லட்சம் ரூபாய் மதிப்பில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. கரூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் வசிப்போர் மற்றும் பல்வேறு நிமித்தமாக வந்து செல்வோர் என நாள்தோறும் லட்சக்கணக்கானோர் புழக்கம் உள்ளது. இதனால், 45 டன்னுக்கும் அதிகமாக குப்பை சேர்கிறது. குப்பைகள் லாரிகள் மூலம் வாங்கல் சாலையில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கில் கொட்டப்பட்டு, அவ்வப்போது தீவைத்து எரிக்கப்படுகிறது. இதன்மூலம் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு வந்தது. இதை தவிர்க்கும் வகையில், திடக்கழிவு மேலாண்மை திட்டம் மூலம் உரம் தயாரிக்கும் திட்டத்துக்கு நகராட்சி நிர்வாகம் இடம் தேர்வு செய்தது. கலவை உரக்கிடங்கு 90 லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டது. உரம் த யாரிக்கும் கூடம் அமைக்கப்பட் டு அதில் அப்பைகள் கொட்டப்பட்டன.

மக்கும் குப்பைகள் குழிகளில் கொட்டி சாணநீர் தெளிக்கப்பட்டு கிளறிவிடப்படும். கலவை உரம் தயாரிக்க தண்ணீர் அவசியம் தேவைப்படுகிறது. இப்பணிக்கு தேவையான தண்ணீரை பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் மூலம், சுத்தகரித்த தண்ணீரை குழாய் மூலம் கொண்டு எடுத்து வந்து ஆறாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் சேமித்து வைக்கப்படவுள்ளது. இங்கியிருந்து கலவை உரக்கிடங்கிற்குள் பகிர்மான குழாய் மூலம் விநியோகம் செய்ய கரூர் நகராட்சி நிர்வாகம் 16 லட்சம் ரூபாய் மதிப்பில் திட்டம் தயாரித்துள்ளது. விரைவில் இப்பணி நிறைவடைந்து உரம் தயாரிப்பு பணி துவங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கி.புரம் டவுன் பஞ்., கூட்டம் லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் டவுன் பஞ்சாயத்து சாதாரண கூட்டம் தலைவர் தனலட்சுமி தலைமையில் நடந்தது. துணைத் தலைவர் மதியழகன் முன்னிலை வகித்தார். பஞ்சாயத்து வார்டு பகுதியில் உள்ள சாலை பராமரிப்பு மற்றும் குடிநீர் வசதி, சுகாதாரம், தெருவிளக்கு பராமரிப்பு குறித்து கவுன்சிலர்கள் பேசினர். கவுன்சிலர்கள் இளங்கோவன், தர்மர், அம்பிகாவதி, கலையரசி உட்பட பலர் பங்கேற்றனர்.

**மண்மங்கலத்தில் மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2010,01:08 IST

கரூர்: கரூர் மண்மங்கலத்தில் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரித்தல் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. மண்புழு உரம் எவ்வாறு தயாரிப்பது, அதன் முக்கியத்துவம் குறித்து செயல்முறை விளக்கம் காண்பிக்கப்பட்டது. கரூர் வேளாண் உதவி இயக்குநர் ஜெயந்தி வரவேற்றார். நடமாடும் மண் பரிசோதனை நிலைய மூத்த அலுவலர் உமாமகேஸ்வரி பங்கேற்று, மண் பரிசோதனை முக்கியத்துவம், மண் வளத்தில் மண்புழுக்களின் பங்கு குறி த்து பேசினார்.கரூர் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் செந்தில்வேல், கால்நடை கழிவுகளை பயன்படுத்தி மண்புழு உர எருக்குழி தயாரித்தல், மண்புழு படுக்கை தயாரித்தல் குறித்து செயல்விளக்கம் அளித்தார். கரூர் வட்டார வேளாண் அலுவலர் கவிதா நன்றி கூறினார்.

**கொடி வகை காய்கறியில் அதிக மகசூல் ரோவர் வேளாண் அறிவியல் மையம் தகவல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2010,01:15 IST

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் கொடி வகை காய்கறிகளில் அதிக மகசூல் பெற ரோவர் வேளாண் அறிவியல் மையம் திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து ஆலோசனை வழங்கியுள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: பரங்கி, பாகல், பீர்க்கு, புடலை, சுரை, வெள்ளரி போன்ற கொடிவகை காய்கறிகள் குகுர்பிட்டேசியே என்ற தாவர குடும்பத்தை சேர்ந்தவை. இவை ஆங்கிலத்தில் குகுர்பிட்டேசியே வெஜிடபிள்ஸ் எனவும், தமிழில் கொடிவகைக் காய்கறிகள் எனவும் பொதுவாக அழைக்கப்படுகின்றன. இவற்றில் பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் நீர்ப்பாசன வசதியுடைய விவசாயிகள் தற்பொழுது பாகல், புடலை போன்ற கொடிவகை காய்கறிகளை பெருமளவு பயிரிட்டுள்ளனர். இது போன்ற கொடிவகை காய்கறிகளில் பூக்கள் பெருமளவு தோன்றினாலும், பூக்களின் எண்ணிக்கைக்கு தகுந்தவாறு காய்கள் உருவாவதில்லை. இதற்கு காரணம் அதிக அளவு ஆண் பூக்கள் உற்பத்தியாவதே ஆகும்.பொதுவாக 15 முதல் 25 ஆண் பூக்களுக்கு ஒரு பெண் பூ என்ற விகிதத்திலேயே பூக்கள் தோன்றும். ஆண் பூக்கள் பூக்காம்பின் நுனியிலும், பெண் பூக்கள் பிஞ்சுகளின் நுனியிலும் தோன்றும். பெண் பூக்களின் எண்ணிக்கை யை அதிகப்படுத்தி மகசூலை அதிகப்படுத்துவதற்கு வளர்ச்சி ஊக்கிகள் பயன்படுத்துவது அவசியமான தொழில்நுட்பமாகும். இதற்கு எத்ரல் என்ற வளர்ச்சி ஊக்கியினை 250 பி.பி.எம்., அதாவது 10 லிட்டர் நீருக்கு 2.5 மில்லி லிட்டர் என்ற அளவில் கலந்த விதைப்பு செய்த 15, 22, 29, 36வது நாட்களில் தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் பெண் பூக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். பரிந்துரைக்கப்பட்ட பேரூட்ட உரங்களை அளிப்பதோடு மட்டுமல்லாமல் காய்கறி நுண்ணூட்ட கலவையினை ஒரு லிட்டர் நீருக்கு ஒரு கிராம் என்ற அளவில் கலந்து விதைத்த 30, 45 மற்றும் 60 வது நாட்களில் இலை வழியாக தெளிப்பதன் மூலம் பிஞ்சுகள் பழுத்து உதிர்வது தவி ர்க்கப்பட்டு தரமான காய்களை அதிக அளவில் பெற முடியும்.

**வெங்காயம், வெற்றிலைக்கு முதன்முறையாக அரசு மானியம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2010,23:22 IST

தேனி: வெங்காயம், திராட்சை, வெற்றிலை, பாக்கு விளைவிக்க முதன்முறையாக அரசு மானிய உதவி வழங்கப்படுகிறது. தோட்டக்கலைத்துறை சார்பில் பல்வேறு பயிர்களை விளைவிக்க மானிய உதவிகள் வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டு முதன் முறையாக வெங்காயம், திராட்சை, வெற்றிலை, பாக்கு விளைவிக்க மானிய உதவிகள் அறிவிக்கப்பட்டுள்ளது. திராட்சை விவசாயிகளுக்கு மொத்தம் 100 எக்டேர் நிலத்திற்கு மானிய உதவிகள் வழங்கப்பட உள்ளது. இந்த 100 எக்டேருக்கான ஒதுக்கீடும் தேனி மாவட்ட விவசாயிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. இத்திட்டத்தின் படி புதிதாக திராட்சை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு எக்டேருக்கு 50 ஆயிரம்

ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இந்த மானியத்தொகை மூன்று ஆண்டுகளுக்கு பிரித்து வழங்கப்படும். வெங்காயம், வெற்றிலை, பாக்கு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு எக்டேருக்கு 7,500 ரூபாய்க்கு இடுபொருட்கள் வழங்கப்பட உள்ளது.

**ஏலத்தோட்டங்கள் விலை அதிகரிப்பு ஏக்கர் ரூ. 20 லட்சத்திற்கு விற்பனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2010,23:22 IST

கம்பம்: ஏலக்காய் விலை நல்ல நிலையில் உள்ளதால், ஏலத் தோட்டங்கள் அதிகவிலைக்கு விற்பனையாகின்றன. ஒரு ஏக்கர் ரூ. 20 லட்சம் வரை விலை போகிறது. ஏலக்காய் விலை, இந்த சீசனில் விவசாயிகள் எதிர்பாராத விலை நிலையில் கிடைத்து வருகிறது. கிலோவிற்கு, சராசரி விலையாக 1600 ரூபாய் வரை கிடைத்தது. கடந்த சில வாரங்களாக விலையில் திடீர் சரிவு ஏற்பட்டது. கிலோவிற்கு சராசரியாக 950 ரூபாய்க்கு குறைந்தது. தற்போது மீண்டும் 1050 க்கு விற்று வருகிறது. கிலோவிற்கு சராசரி விலை ஆயிரம் ரூபாய் வரை விற்பதால், விவசாயிகள் திருப்தியாக உள்ளனர். இந்நிலையில், ஏலத்தோட்டங்களின் விலை பலமடங்கு உயர்ந்துள்ளது. ஏக்கர் அதிபட்சமாக ஐந்து லட்சம் ரூபாய்க்கு விற்பனையான ஏலத்தோட்டங்கள், தற்போது ஏக்கர் விலை 20 லட்சம் ரூபாய் வரை உயர்ந்துள்ளது. சில குறிப்பிட்ட பகுதிகள், முதல் நிலை நிலங்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளன. அந்த நிலங்களின் விலை 20 லட்சத்திற்கும் கூடுதலாக உயர்ந்துள்ளது. மூன்றாம் நிலை நிலங்களின் விலையும் அதிகரித்துள்ளது. புதிதாக ஏலக்காய் விவசாயம் பண்ணுவதற்கு பலர் முன்வந்துள்ளனர். எனவே ஏலத் தோட்டங்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. விவசாயம் செய்யாமல் தோட்டங்களை வைத்திருந்தவர்கள் கூட தற்போது ஏலக்காய் விவசாயத்தில் தீவிரம் காட்டுகின்றனர்.

**விதை நெல் விற்பனை களை கட்டுகிறது**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2010,22:41 IST

ராமநாதபுரம்: மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால், விதை நெல் விற்பனை ஜோராக நடந்து வருகிறது. ராமநாதபுரத்தில், பருவ மழை கூட இந்த ஆண்டு பதம் பார்த்து விட்டது. போதிய மழைப்பொழிவு இல்லாமல் நீர் நிலைகள் வெறிச்சோடின. விவசாய இரண்டாம் கட்டப்பணிகள் தொடங்க வேண்டிய காலகட்டத்தில், மழையில்லாமல் ஆரம்ப பணிகள் கூட மாவட்டத்தில் தொடங்காமல் இருந்தது. யாரும் எதிர்பார்க்காத வகையில் கடந்த

சில நாட்களாக நல்ல மழை கொட்டிவருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியின் உச்சத்திற்கு சென்றுள்ளனர். நடவு செய்ய வாய்ப்பில்லை என்பதால், விதைப்பு பணிக்கு மும்முரமாக தயாராகி வருகின்றனர். இதற்காக அரசு மற்றும் தனியார் விற்பனையாளர்களிடம் விதை நெல் வாங்குவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. விவசாயிகள் இருப்பு வைத்த விதைகளும் புழக்கத்தில் வந்துள்ளதால், மாவட்டத்தில் விவசாய பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. ஒரே நேரத்தில் அனைவரும் பணியை தொடங்கியுள்ளதால், உழவுப்பணிக்கு போதிய டிராக்டர் கிடைக்காமல் விவசாயிகள் திண்டாடி வருகின்றனர்.

## *தேவை அதிகரிப்பால் சீரகம் விலை ரூ.200 உயர்வு*

*உள்நாட்டில் மட்டுமின்றி, வெளிநாடுகளிலும் சீரகத்திற்கான தேவைப்பாடு உயர்ந்து வருகிறது. இதனையடுத்து, ஒரு குவிண்டால் சீரகத்தின் விலை ரூ.200 அதிகரித்துள்ளது. நடப்பு சந்தைகளில் மட்டுமின்றி, முன்பேர வர்த்தகத்திலும் இதன் விலை உயர்ந்துள்ளது. நடப்பு சந்தையில் 20 கிலோ சீரகத்தின் விலை, கடந்த மூன்று தினங்களில் ரூ.1,800–2,660 என்ற அளவிலிருந்து ரூ.2,115–2,661–ஆக உயர்ந்துள்ளது. முன்பேர வர்த்தக சந்தைகளில், செப்டம்பர் மாதத்திற்கான ஒப்பந்தத்தில், ஒரு குவிண்டால் சீரகத்தின் விலை ரூ.13,660–ஆகவும், அக்டோபர் மாதத்திற்கான ஒப்பந்தத்தில் இதன் விலை ரூ.13,723–ஆகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.*
*அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள், இந்தியாவிலிருந்து அதிக அளவில் சீரகத்தை இறக்குமதி செய்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. சீரகம் விளையும் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், சந்தைகளுக்கு சீரகம் வரத்து குறைந்துள்ளது. இதனாலும் விலை உயர்ந்து வருவதாக சந்தை வட்டாரத்தினர் தெரிவித்தனர்.*

**நாட்டில் உணவுப்பொருட்கள் உற்பத்தி பெருக விவசாயிகளுக்கு தேவையான வசதிகளை அரசு செய்து கொடுக்க வேண்டும் முன்னாள் பிரதமர் தேவேகவுடா வேண்டுகோள்**

*ஊட்டி, செப்.28–*

*'நாட்டில் உணவுப் பொருட்கள் உற்பத்தி பெருக மத்திய–மாநில அரசுகள் விவசாயிகளுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும்' என்று முன்னாள் பிரதமர் தேவேகவுடா கூறினார்.*

*முன்னாள் பிரதமர் தேவேகவுடா*

*நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே உள்ள தும்மனட்டி கிராமத்தில் மதசார்பற்ற ஜனதாதள கட்சியின் பொதுக்கூட்டம் மாவட்ட தலைவர் பி.விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது.*

*இந்த கூட்டத்தில் கட்சி தலைவரும் முன்னாள் பிரதமருமான தேவேகவுடா கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–*

*நீலகிரி மாவட்டத்தில் உள்ள தும்மனட்டி கிராமமக்கள் இன்றைய கால கட்டத்தில் காந்தி சிலையை தங்களது கிராமத்தில் வைத்து அவரது கொள்கை, கோட்பாட்டை கடைபிடித்து வருகிறீர்கள். என்னை காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த வைத்ததை பாராட்டுகிறேன்.*

*மலைவாழ் மக்கள் பட்டியல்*

*தும்மனட்டி ஊராட்சி தலைவர் பி.விஸ்வநாதன் ஜனதாதள கட்சி தலைவராக இருந்தாலும் சமுதாய தலைவராக இருந்து வருகிறார். இந்த பொதுக்கூட்ட மேடையில் பேராசிரியர் குள்ளன், நீலகிரி படுகர் சமுதாய மக்களை மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்க்க மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும் என்று குறிப்பிட்டு உள்ளார். நான் இந்த பிரச்சினை குறித்து பிரதமரையும், சம்பந்தப்பட்ட மத்திய மந்திரியையும் சந்தித்து பேச முயற்சி செய்கிறேன்.*

*நீலகிரி மாவட்ட படுகர் சமூக மக்கள் படித்து நாகரிகம் அடைந்து இருந்தாலும் இன்று வரை பாரம்பரியத்தை கடை பிடித்து வருவதால் மகிழ்ச்சி அடைகிறேன். பாராட்டுகிறேன்.*

*விவசாயிகளுக்கு வசதிகள்*

*விவசாய பயிர்களுக்கு உரிய விலை கிடைப்பது இல்லை என்று கூறி பட்டதாரி இளைஞர்கள் நகரத்திற்கு குறைந்த சம்பளத்திற்கு வேலைக்கு செல்கின்றனர்.இதனால்*

கிராம பகுதிகளில் விவசாய உற்பத்தி குறைகிறது. அழகான நீலகிரி மாவட்டத்தில் விவசாயம் செய்ய இளைஞர்கள் குறைவு என்பதால், குறைந்த விலைக்கு இடங்களை வாங்கி கட்டிடம் கட்டி அதிக விலைக்கு விற்கப்படுகிறது. எனவே நாம் விவசாயத்தை காப்பாற்ற வேண்டும். நாட்டில் நிலவி வரும் விவசாய பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு, உணவு பொருட்கள் உற்பத்தி பெருக மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும்.இவ்வாறு முன்னாள் பிரதமர் தேவேகவுடா கூறினார்.

முன்னதாக தும்மனட்டி கிராம தலைவர் பாபு, முன்னாள் பிரதமர் தேவேகவுடாவுக்கு படுகர் பாரம்பரிய தலைப்பாகை அணிவித்து கவுரவித்தார்.கூட்டத்தில் மதசார்பற்ற ஜனதா தள கட்சியின் மாநில தலைவர் இஸ்மாயில், துணை தலைவர் காளப்பட்டி பொன்னுசாமி, மாநில செயலாளர் ஜான்குமார், அகில இந்திய பொதுச்செயலாளர் பலராமன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக ஊட்டியில் உள்ள மாவட்ட மத சார்பற்ற ஜனதா தளம் அலுவலகத்தில் அமைக்கப்பட்ட கல்வெட்டை தேவேகவுடா திறந்து வைத்தார். மேலும் அங்குள்ள காந்தி, காமராஜர் அஸ்திக்கு மரியாதை செலுத்தினார்.

## குன்னூர் பகுதியில் உள்ள தேயிலை தோட்டங்களில் உரமிடும் பணி தீவிரம்

குன்னூர், செப்.28–

குன்னூர் பகுதியில் உள்ள தேயிலை தோட்டங்களில் உரமிடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தேயிலை விவசாயம்

நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை விவசாயிகள் தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மலை சரிவான பகுதிகளில் செழித்து வளரும் தேயிலை செடிகளுக்கு சூரிய ஒளியும், மழையும் மாறி, மாறி கிடைக்க வேண்டும். அப்போது தான் சூரிய ஒளியில் செடிகள் பச்சயம் சேகரித்து கொழுந்துகள் ஊக்கமாக வளரும்.

அதிக மழையோ அதிக வெப்பமோ இருந்தால் தேயிலை மகசூல் பாதிக்கப் படுமு. அதிக சூரிய வெளிச் சத்தை தடுக்க தேயிலை செடி களுக்கு நடுவில் நிழல் தரும் மரங்கள் நடவு செய்யப்பட்டு உள்ளன.

மழைநீர் அதிக அளவு தேங்காத வாறு இருக்க மலை சரிவுகளில் ஆங்காங்கே

தேவையான இடங்களில் மழைநீர் கால்வாய்கள் உள்ளன.

ஊட்டச்சத்து

தேயிலை செடிகளுக்கு உபாசி வேளாண்மை அறி வியல் மையத்தின் அறிவுரை படி ஆண்டுக்கு 4 முறை உரங்கள் இட வேண்டியது கட்டாயமாகிறது. ஆனால் தற்போது மழை அளவு நீலகிரி மாவட்டத்தில் குறைந்து விடுவதால் பருவத்திற்கு உரமிட முடியாத நிலை சிறு தேயிலை விவசாயிகளுக்கு இருந்து வருகிறது.

இந்த ஆண்டு தமிழகம் மட்டுமின்றி நீலகிரி மாவட்டத்திலும் தென் மேற்கு பருவமழை பெய்வது குறை வடைந்து உள்ளது. குன்னூர் மற்றும் சுற்றுப்புற பகுதியில் எதிர்பார்த்த அளவு மழை இல்லாமல் இருந்தது. இதனால் தேயிலை செடிகளுக்கு ஏற்ற பருவத்தில் உரமிட முடியாத நிலை இருந்தது.

தேயிலை செடிகளுக்கு தேவையான ஊட்டச்சத்து குறைவுறும் போது இலைகள் மஞ்சள் நிறமாகி விடுகிறது. பச்சை தேயிலை கொழுந்துகள் ஊக்கமாக வளர முடியாமல் வஞ்சி கொழுந்துகளாக மாறி விடுகின்றன. இதனால் அறு வடை செய்யப்படும் பச்சை தேயிலையின் கொழுந்துகளின் எடை குறைவடைகிறது.

உரமிடும்பணி

கடந்த ஜூன் மாதத்தில் இருந்து மழையை எதிர் பார்த்து காத்திருந்த விவசாயி களுக்கு தற்போது குன்னூர் பகுதியில் பெய்து வரும் மழை வரப்பிரசாதமாக உள்ளது. பெரும்பாலான சிறு விவ சாயிகள் தோட்டங்களில் உர மிட முடியாத நிலை இருந்த தால் இந்த மழையை பயன் படுத்தி விவசாயிகள் உரமிட தொடங்கி உள்ளனர். கடந்த ஒரு வார காலமாக குன்னூர் பகுதியில் பகலில் வெயில் நிலவி வருகிறது. ஆனால் மாலை நேரத்தில் மேக மூட்டம் உருவாகி வரு கிறது. இதனால் தொடர் மழை பெய்து வருகிறது. இந்த மழை பலத்த மழையாக இல் லாமல் மிதமான மழையாக இருப்பதால் மழைநீர் பூமியில் நன்கு இறங்கி வருகிறது.

மகசூல் அதிகரிக்குமா?

இந்த மிதமான மழையினால் தேயிலை செடிகளுக்கு இடப் பட்ட உரம் நன்று செடிகளின் வேர்களால் கிரகிக்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் அக்டோபர், நவம்பர் மாதங்கள் வடகிழக்கு பருவ மழை காலமாக உள்ளது. இந்த மழையும் பருவத்திற்கு சரியான முறையில் பெய்தால் தேயிலை மகசூல் அதிகரிக்கும் என்று விவசாயிகள் தரப்பில் கூறப்படு கிறது. தற்போது உரத்தின் விலை யும் அதிகரித்து உள்ளது. இதனால் சிறு தேயிலை விவசாயிகள் நிர்ணயிக்கப் பட்ட உர மூடைகளை விட குறைவான அளவே வாங்கும் நிலை உருவாகி உள்ளது.

*எனவே மத்திய, மாநில அரசுகள் உர விலையை குறைக்க நடவடிக்கை எடுக்க சிறு தேயிலை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

## கூடலூர் பகுதி ஆதிவாசி மக்களுக்கு இலவச கால்நடைகள் வழங்க கோரி கலெக்டர் அலுவலகம் முற்றுகை

*ஊட்டி, செப்.28–*
*கூடலூர் பகுதியில் உள்ள ஆதிவாசி மக்களுக்கு அரசு அறிவித்துள்ள இலவச கால்நடைகளை வழங்க கோரி ஊட்டியில் உள்ள கலெக்டர் அலு வலகத்தை ஆதிவாசி மக்கள் முற்றுகையிட்ட னர்.*
*ஆதிவாசி மக்கள்*
*நீலகிரி மாவட்டத்தில் காட்டு நாயக்கர், தோடர், கோத்தர், இருளர், பனியர், குறும்பர் உள்ளிட்ட ஏராளமான ஆதிவாசி மக்கள் வாழ்ந்து வருகின்றன. இவர் களின் முன்னேற்றத்திற்காக அரசு கோடிக்கணக்கில் பணத்தை செலவு செய்கிறது.*
*பெரும்பாலான ஆதிவாசி மக்களின் வாழ்க்கை தரம் உயர வில்லை. இன்றும் குடிசை வீடுகளில் வாழும் ஆதிவாசி மக்களே அதிகமாக உள்ளனர். கடந்த சில ஆண்டு களுக்கு முன் ஆதிவாசி மக்களின் வாழ்க்கைக்கு வருமானம் ஈட்டி தர இலவச ஆடுகள், கறவை மாடுகள் வழங்க முடிவு செய்யப் பட்டது.*
*அரசு திட்டங்கள்*
*இந்த திட்டத்தின் கீழ் கூடலூர் பகுதியில் ஒரு சில ஆதிவாசி குடும்பங்களுக்கு இலவச ஆடுகள் வழங்கப் பட்டன என்றும், பெரும்பா லான ஆதிவாசி மக்களுக்கு அரசின் திட்டங்கள் கிடைக்க வில்லை என்றும் புகார் தெரிவித்து உள்ளனர்.*
*இந்த நிலையில் கூடலூர் அருகே செரு முள்ளி, ஏழுமரம் பகுதியை சேர்ந்த ஆதிவாசி மக்கள் அம்பிலி என்பவர் தலைமையில் அரசு அறிவித்த இலவச கால்நடைகளை வழங்க கோரி நேற்று ஊட்டி யில் உள்ள மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை முற்றுகை யிட்டனர்.*
*மனு*
*பின்னர் மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக்கிடம் மனு ஒன்று கொடுத்தனர்.*
*அந்த மனுவில் கூறப்பட்டு உள்ளதாவது:–*
*ஆதிவாசி மக்களுக்கு வருமானம் கிடைப்பதற்காக அரசு இலவச ஆடு மற்றும் கறவை*

மாடுகளை வழங்கும் திட்டத்தை அறிவித்தது. இந்த திட்டத்தின் கீழ் கூடலூர் பகுதியில் உள்ள 10 குடும்பங் களுக்கு மட்டுமே இலவச ஆடு கள் வழங்கப்பட்டு உள்ளது. ஆனால் பிற ஆதிவாசி குடும் பங்களுக்கு ஆடு, கறவை மாடு கள் வழங்கப்படவில்லை. இந்த திட்டம் அறிவிக்கப் படும் போது ஒவ்வொரு ஆதி வாசி பிரிவுக்கும் சுமார் 36 யூனிட் ஆடு, மாடுகள் வழங்கப் படும் என்று அறிவிக்கப்பட் டது. ஆனால் இது வரை எங்க ளுக்கு வழங்கப்படவில்லை. எனவே தாங்கள் நடவடிக்கை எடுத்து நாங்கள் வாழ்க்கையில் முன்னேற இலவச கால்நடைகளை வழங்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## தேயிலை விற்பனை சந்தையை அதிகப்படுத்த வேண்டும் சிறு தேயிலை உற்பத்தியாளர் சங்கம் கோரிக்கை

குன்னூர், செப்.28–

தேயிலை விற்பனை சந்தையை அதிகப்படுத்த வேண்டும் என்று சிறு தேயிலை உற்பத்தியாளர் கள் சங்க தலைவர் ராமு கோரிக்கை விடுத்துள் ளார்.

புதிய தலைவர்

நீலகிரி மாவட்ட சிறு தேயிலை உற்பத்தியாளர் சங்கம் மற்றும் நீலகிரி மாவட்ட சிறு தேயிலை விவநாயிகள் சங்கம் ஆகியவற்றின் பொதுக் குழு கூட்டம் குன்னூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனர் அம்பலவாணன் கலந்து கொண்டார்.

நீலகிரி மாவட்ட சிறு தேயிலை உற்பத்தியாளர் சங்கத்தின் புதிய தலைவராக ராமு பொறுப்பு ஏற்று கொண் டார். கூட்டத்தில் தலைவர் ராமு பேசியதாவது:–

வேளாண்மை தொழில்

கடந்த சில ஆண்டுகளாக தேயிலை தொழிலின் வருமானம் குறைவடைந்து வருகிறது. தேயிலை ஏல மையத்தில் தேயிலைக்கான கிராக்கி குறைவடைந்து உள்ளது.

தேயிலை தொழிலின் வருமானத்தை அதிகரிக்க தேயிலை விற்பனைக்கான சந்தையை அதிகப்படுத்த தேயிலை வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேயிலை ஏலத்தில் அதிக மான வர்த்தகர்களை பங்கேற்க செய்து தேயிலை வாங்கு வோரின் எண்ணிக்கையை அதிகரித்தால் தேயிலை தொழில் வளர்ச்சி பெற முடியும். தேயிலை தொழிலை வேளாண்மை சார்ந்த தொழிலாக அரசு அறிவிக்க முன்வர

வேண்டும்.

இவ்வாறு அறிவித்தால் தேயிலை உற்பத்தியாளர் களுக்கு வரி சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. தற்போது தரத்திற்கு முக்கியத் துவம் கொடுக்க தேயிலை வாரியம் அறிவுறுத்தி வருகிறது. பச்சை தேயிலையின் தரம் குறித்த விழிப்புணர்வை சிறு தேயிலை விவசாயிகளுக்கு உணர்த்தி வருகிறோம்.

மானியம்

சிறு தேயிலை விவசாயி களுக்கு மானியம் வழங்கப் படுகிறது. அது போன்று தேயிலை உற்பத்தியாளர் களுக்கும் அரசு மானியம் வழங்க முன்வர வேண்டும். அவ்வாறு மானியம் வழங்கினால் தேயிலை உற்பத்தி இன்னும் நவீன மயமாக்க முடியும். தேயிலை உற்பத்திக்கான நவீன எந்திரங்கள் வாங்க வேண்டியது உள்ளது. நவீன எந்திரங்கள் மூலம் தான் தரமான தேயிலை உற்பத்தியை மேற்கொள்ள முடியும். எனவே தேயிலை வாரியம் 50 சதவீதம் மானியம் வழங்க முன்வர வேண்டும்.

சி.டி.சி. தேயிலை

ஆர்தோடக்ஸ் தேயிலை உற்பத்திக்கு மானியம் வழங்கப்படுகிறது. அது போன்று சி.டி.சி. தேயிலை உற்பத்திக்கும் மானியம் வழங்க வேண்டும். இந்த தேயிலை தூள் ஏற்றுமதிக்கும் மானியம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.